KANTON LUZERN
Bildungs- und Kulturdepartement

Dienststelle Volksschulbildung

Tamilisch

# Die Schulpsychologischen Dienste
## பாடசாலைஉளவியல் சேவைகள்

பாடசாலைஉளவியல் சேவையானது, அரசினர் பாடசாலையின் ஒரு சேவை வாய்ப்பாகும். இதனது சேவையைப் பெற்றோர், பிள்ளைகள், இளைஞர்கள், ஆசிரியர்கள், பாடசாலைத்தலைமையாசிரியர்கள், நிர்வாகப்பணிமனைஅங்கத்தவர்கள் அனைவரும் செலவில்லாமல் பெற முடியும்.

பாடசாலைஉளவியல் சேவையானது பிள்ளைவளர்ப்பு, மனஉணர்வு, பாடசாலை சம்பந்தமான பிரச்சினைகளின்போது, ஆலோசனையும் ஆதரவும் வழங்குகின்றது. இது உதாரணமாக கற்றல் - திறமை ஆற்றல்கள், பாடசாலைத்திறமை, அறிவின்தரம், துன்புறுத்தலுக்குட்படுதல், வளர்ச்சியில் பிரச்சினைகள், உளவியல் பிரச்சினைகள், வளரியலிளம்பருவ விடயங்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

ஆலோசனைக்கு ஆதாரமாக, ஒரு குறிக்கப்பட்ட விடயவிளக்க அறிக்கை பயன்படுத்தப்படும் (குணம்குறிகள் மூலம் நோயைக் கண்டறிதல்=தெரிந்துகொள்தல்). கேள்விகளுக்கிணங்க, இவ்வாறான விளக்க ஆய்வுகள் வேறுபடும். அநேகமாக அறிவுத்திறன் அளவிடப்படும். அடிக்கடி சமூகக்காரணிகளும், உள/உணர்வு நலன்களும் ஆலோசனைக்கு உள்ளெடுக்கப்படும்.

பெற்றோருக்கும் பாடசாலைக்கும் அவர்களது பிள்ளைவளர்ப்பு, கற்பித்தல் கடமைகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம், கற்றலையும் வாழ்க்கையிலுள்ள சந்தர்ப்பங்களையும் பிள்ளை கண்டுகொள்ள ஊக்குவிப்பது பாடசாலைஉளவியல் சேவையின் நோக்கமாகும். ஆலோசனை வேலையின்போது உளவியலானது, அநேகமாகத் திட்டமிட்டதும், தீர்வை நோக்கிய அடிப்படையிலும் அமைந்திருக்கும். பாடசாலைஉளவியல் சேவையானது, பிரத்தியேகப்பாடசாலை அல்லது வேறுவிதமான நடவடிக்கைகளையும் சிபார்சு செய்யலாம்.

பாடசாலைஉளவியற்பயிற்சியாளர்கள், உயர்கல்லூரி அல்லது துறைசார்உயர்கல்லூரி ஒன்றில் உளவியற்கல்வியை முடித்துள்ளதுடன், அநேகமாக பிள்ளைகள் - இளைஞர் உளவியலில் பட்டப்பின்படிப்பையும் அல்லது உளவியற்பயிற்சியில் பட்டப்பின்படிப்பையும் கற்று முடித்திருப்பார்கள்.

சித்திரை 2010